| 51 | T | I |
|---|---|---|

## முதலாந் தவணைப் பரீட்சை - 2017
## 1st Term Examination - 2017

நாடகம்
Drama

நேரம் :- 3மணித்தியாலம்
Time :-3 Hours

தரம்
Grade 10

### பகுதி - I

❖ சரியான விடையைத் தெரிவு செய்க.

01. ஆற்றுகைக் கலையாக விளங்குவது எது?

1. ஓவியம் 2. சிற்பம் 3. இலக்கியம் 4. நாடகம்

02. நாடகத்தின் பிரதான மூலகம் எது?

1. எழுத்துரு 2. நடிகன் 3. இசை 4. ஒளி

03. அரங்கின் பிரிக்கமுடியாத பகுதியினராக விளங்குபவர் யார்?

1. பார்வையாளர் 2. நெறியாளர் 3. நாடகாசிரியர் 4. தயாரிப்பாளர்

04. நாடகம் போலச்செய்தலிலிருந்து தோன்றியது எனக்கூறியவர்

1. பேரா.கா.சிவத்தம்பி 2. ஸ்ரனிஸ் லவஸ்கி
2. அரிஸ்ரோட்டில் 4. J.J தொம்சன்

05. நடிகர் பார்வையாளர் தொடர்பு நெருக்கமானதாக இருக்கும் அரங்கவெளி எது?

1. படச்சட்டமேடை 2. வட்டக்களரி 3. கிரேக்கஅரங்கு 4. குளோப்அரங்கு

06. வானொலி நாடகத்தின் அரங்காக விளங்குவது எது?

1. அரங்கு 2. திறந்தவெளி 3. கேட்போரின்மனம் 4. ஒலிப்பதிவுசெய்யப்படும்இடம்

07. படச்சட்ட மேடையின் நடிப்பிற்குரிய மிகப்பலமான பகுதிகள் எது?

1. UL,CC,DC,DC 2. UR,DR,CR,CC 3. CC,DR,DC,DL 4. CR,CL,CC,DC

08. நடிகர் பாத்திரமாக மாறுவதை எவ்வாறு அழைப்பார்.

1. ஆள்மேற்கொள்ளல் 2. அபிநயித்தல் 3. நடனம்ஆடுதல் 4. கதைகூறுதல்

09. நாடகத்தின் பண்புகளில் ஒன்று அல்லாதது.

1. சித்தரிப்புப் பண்பு கொண்டது
2. ஆற்றுகைக் கலை வடிவமானது.
3. வாழும் கலையாக அமைவது.
4. பார்வையாளருடன் நேரடித்தொடர்பற்றது.


kalvi.lk

10. நாடகத்தின் அருவமூலகமாக விளங்குவது எது?

1. எழுத்துரு 2. நடிகன் 3. பார்வையாளன் 4. ஒப்பனை

11. நாடகத்தை எழுதுபவர் யார்?

1. தயாரிப்பாளர் 2. நெறியாளர் 3. நாடகாசிரியர் 4. நடிகர்

12. உலகளாவிய ரீதியில் நாடகம் சார்ந்து வெளிவரும் இதழ்.

1. ஆற்றுகை 2. கட்டியம் 3. அரங்கம் 4. கூத்தரங்கு

13. நாடகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் நாடு எது?

1. இந்தியா 2. இலங்கை 3. கிரேக்கம் 4. இத்தாலி

14. ஈழத்து தமிழ் நாடகப்பாரம்பரிய வடிவம் எது?

1. கூத்து 2. இசைநாடகம் 3. மேடைநாடகம் 4. சூரன்போர்

15. ஈழத்துச் சிறுவர் நாடகத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.

1. பேரா.சி.மௌனகுரு 2. குழந்தை ம. சண்முகலிங்கம்
3. சி.ஜெயசங்கர் 4. வேலு சரவணன்

16. வகுப்பறையில் இருந்தவாறே விளையாடக்கூடிய அரங்க விளையாட்டு எது?

1. நாரைநாராய் 2. குருட்டாட்டே 3. ஆடும்வீடும் 4. பஸ்

17. ஆக்கியல் அசைவிற்கு உதாரணமாக விளங்குவது.

1. பூப்பறித்தல் 2. காவடி 3. கிணற்றில்நீர்அள்ளுதல் 4. நடத்தல்

18. "தந்த தகிர்த தகிர்த தாம்" என்ற தாளக்கட்டு எந்த சிறுவர் நாடகப்பாத்திரத்திற்குரியது.

1. சிங்கம் 2. நரி 3. கரடி 4. குரங்கு

19. நடிகனுக்கான பிரதான மூலகங்கள் எவை?

1. கண்,முகம் 2. குரல்,உள்ளம் 3. உடல்,குரல் 4. கை,கால்

20. பின்வருவனவற்றுள் சிறுகதையாக அமைவது எது?

1. ஆரொருநோகேன் 2. புதியதொருவீடு 3. எந்தையும்தாயும் 4. மனிதமாடு

( 20x11/2=30 புள்ளிகள்)

Education கல்வி

## பகுதி - II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. சுருக்கமான விடை தருக.

1. வாய்மொழி பயன்படுத்தாமல் வெளிப்படும் சித்தரிப்பு எது?
2. படச்சட்ட அரங்கை வேறு எப்பெயரால் அழைப்பர்?
3. நாடகத்திற்கு தேவையான நிதியுதவி செய்பவர் யார்?
4. குரல் பயிற்சிக்கான அடிப்படைப் பயிற்சி எது?
5. உலக நாடகதினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
6. சிங்கள நாடக வடிவமான 'நாடகம' ஆற்றுகை செய்யப்படும் அரங்கவெளி எது?
7. "பிள்ளை அழுத கண்ணீர்" என்ற சிறுவர் நாடகத்தை எழுதியவர் யார்?
8. "வெள்ளுடுப்பாட்டம்" என அழைக்கப்படுவது எது?
9. குரல் பயிற்சிக்கான அரங்க விளையாட்டு ஒன்று தருக?
10. "ஆதி சிவன் மைந்தனல்லோ" என்ற பாடல் இடம்பெற்ற கூத்து எது?

( 10 புள்ளிகள்)

02. 1) ஆற்றுகைக் கலைகள் 5 குறிப்பிடுக?

2) நாடகக் கலையின் சிறப்பியல்புகள் 5 தருக?

3) மேடை நாடகம், வானொலி நாடகத்திற்கிடையிலான வேறுபாடுகள் 5 தருக?

( 3x5=15 புள்ளிகள்)

03. 1) புதிதளித்தல் என்றால் என்ன?

2) புதிதளித்தல் எவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன?

3) நியம, நியமமில் அரங்குகளில் பாத்திரத் தெரிவு முறைகளை தனித்தனியே குறிப்பிடுக?

4) புதிதளித்தல் மூலம் நடிகனிடம் வளர்த்தெடுக்கப்படும் பண்புகள் 5 குறிப்பிடுக?

( 2+3+5+5=15 புள்ளிகள்)

04. 1) அரங்க வெளி என்றால் என்ன?

2) சடங்குகளுக்கான அரங்க வெளிகள் மூன்று குறிப்பிடுக?

3) நாடகஆற்றுகைகளுக்கான அரங்கவெளிகள் 5 தருக?

4) நீர் விரும்பிய அரங்கவெளி ஒன்றை வரைந்து காட்டி பகுதிகளைக் குறிப்பிடுக?

(2+3+5+5=15 புள்ளிகள்)


kalvi.lk

05\. 1) நாடக எழுத்துரு ஒன்றில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் 5 தருக?

2) மோதுகை / முரண் எவ்வெவ் நிலைகளில் ஏற்படுகிறது?

3) சிறுகதை ஒன்றை நாடகமாக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 5 குறிப்பிடுக?

( 3x5=15 புள்ளிகள்)

06\. 1) தளர்வுப் பயிற்சி என்றால் என்ன?

2) தளர்வுப் பயிற்சியின் வகைகள் எவை?

3) குரல் பயிற்சியின் போது உடலிலிருந்து குரல் வெளிப்படும் இடங்கள் 5 குறிப்பிடுக?

4) நடிப்பதற்கு உடல் பயிற்சி ஏன் அவசியமாகிறது?

( 2+3+5+5=15 புள்ளிகள்)

07\. பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு வரைக.

1. தொலைக்காட்சி நாடகம்
2. சிறுவர் நாடகங்கள்
3. பார்வையாளர்
4. அரங்க விளையாட்டுக்கள்
5. நெறியாளர்

( 3x5=15 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page